**திருகோணமலை நகர சபை**
**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 சனவரி 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.1 முதல் 1.3.5 வரையான பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவித்திருக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து 2010, முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நன்கொடையாகக் கிடைத்த ஆறு வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிருப்பிலுள்ள நகரசபை ஆயுர்வேத நிலையத்தின் மருந்து இருப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர சபையின் ஊழியரிடமிருந்து ஓய்வூதிய பங்களிப்பாக அறவிடப்பட்ட ரூபா 6,136,695 தொகையொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படாதிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த அறுவைக்கூட வாடகை ரூபா 143,349 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கடற்படையினால் நகர சபைக்கு வழங்கப்பட்ட நீருக்காக செலுத்த வேண்டிய ரூபா 4,645,367 தொகையொன்று 1991 ஆம் ஆண்டு முதல்

தீர்க்கப்படாதிருந்த போதிலும், அது மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பதவியணியினர் கடன் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த பதவியணியினர் கடன் மீதி ரூபா 16,854,261 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 17,581,796 ஆக கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் பதவியணியினர் கடன் மீதி ரூபா 727,535 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) வைப்புக்களுக்குரியதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து மீளாய்வாண்டின் போது வட்டி வருமானமாகக் கிடைத்த ரூபா 123,913 தொகை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஹொட்டெல் மற்றும் உணவகங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 430,820 தொகையான வரித்தொகை நிதிக்கூற்றுக்களில் வேறாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 தொங்கல் கணக்கு

தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது தொங்கல் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 30,153,029 தொகையான செலவு மீதி 2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காண்பிக்கப்படுகின்ற ரூபா 6,161,644 கூட்டுமொத்தத் தொகையான 2003 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய கணக்கு மீதி நிலுவையாகக் காணப்பட்டது. இருந்த போதிலும் அந்த மீதியை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,557,338 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத செலவு மீதியை இனங்கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **விடயம்** | **தொகை** | **கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|
| | **ரூபா** | |
| நிலையான சொத்துக்கள் | 78,286,101 | நிலையான சொத்துப் பதிவேடு |
| பயன்பாட்டுச் சேவைக்கான கடன் | 5,010,261 | |
| பதவியணியினர் கடன் | 15,293,760 | |
| அறவிடவேண்டிய பயன்பாட்டுச் சேவைகள் | 110,137 | மீதி உறுதிப்படுத்துதல் கடிதம், காலப்பகுபாய்வு, விரிவான பட்டோலை |
| வருமானக் கடன்பட்டோர் | 90,005,110 | |
| முற்கொடுப்பனவுகள் | 2,240,952 | |
| முற்பெறுவனவுகள் | 4,533,938 | |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 77,031,321 | |
| கடன்கொடுத்தோர் | 1,191,632 | |

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கிழக்கு மாகாண சபை நிதிப்பிரமாண இலக்கம் 433 இற்கு இணங்க சபைக்குச் சொந்தமான 26 வாகனங்களுக்குரிய மாதாந்த பொழிப்பு முறையாகப் பேணப்பட்டிருக்க வில்லை.

## 2. வருமான நிருவாகம்

### 2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உள்ளவாறான வருமானம்** | **2014 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| | | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** |
| (i) | ஆதனவரி | 62,100 | 31,249 | 80,270 |
| (ii) | வாடகை | 26,995 | 20,545 | 15,319 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 8,310 | 3,918 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 165,739 | 116,375 | 416 |

### 2.2 நிலுவை வாடகை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் வாழ்ந்து வரும் முப்பத்துமூன்று உத்தியோகத்தர்களினால் பல வருடக் கணக்காக வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 253,554 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. எனினும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் மரக்கறி சந்தை மற்றும் மீன் சந்தைகளில் 298 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 14,899,765 தொகையை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,451,959 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,837,240 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் (ஊ.சே.நி) செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தைக் கணிப்பீடு செய்யும் போது அமைய ஊழியர்களின் மொத்தச் சம்பளமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இருந்த போதிலும் சபையினால் 120 அமைய ஊழியர்களுக்குரிய ஊ.சே.நி கணிப்பீடு செய்யும் போது அடிப்படைச் சம்பளம் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக அறவிட வேண்டியிருந்த பங்களிப்புப் பணத்தின் கூட்டுத் தொகைக்கும் மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட பங்களிப்புப் பணத்தின் கூட்டுத்தொகைக்கும் இடையே வேறுபாடு ரூபா 2,635,185 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபையினால் 161 கடைகளைக் கொண்டுள்ள சந்தைக் கட்டிடம் 2011 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்டிருந்தது. அந்தக் கடைகளுக்கிடையே 81 கடைகள் 2011 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அண்ணளவாக ரூபா 2,000,000 தொகையான வருடாந்த வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

(இ) நகர சபைக் கட்டணச் சட்டத்தின் 164 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்பாடு நிலையில் காணப்படுகின்ற ஹோட்டல்களின் மொத்த வருமானத்தின் அடிப்படையில் வருமானவரி அறவிட வேண்டிய போதிலும், அந்த ஹோட்டல்களின் தேறிய வருமானத்தின் அடிப்படையில் வருமான வரி அறவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 71,461 தொகையான வருமானத்தை சபை இழந்திருந்தது.

### 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குரிய இருபத்தெட்டு வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான கால வீச்சில் விளைவற்று சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

### 4.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 4.3.1 மலக் கழிவுப் பொருட்களை அகற்றும் இயந்திரக் கூடத்தை அமைத்தல்

இந்த இயந்திரக்கூடத்தை அமைப்பதற்காக ரூபா 6,401,355 பெறுமதியான ஒப்பந்தம் 2012 சனவரி 28 ஆந் திகதி சபையினால் கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உரிய அதிகாரத் தரப்பனரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கில் கழிவுப்பொருட்களை அகற்றும் இயந்திர உபகரணங்கள் நிர்மாணங்களுக்குரிய மொத்த ஒப்பந்தச் செயற்பாடுகளும் மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு பிரித்து கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்கார நிறுவனத்தால் ஒப்பந்த உடன்படிக்கை மீறப்படுமாயின் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டத்தைப் பாதுகாப்பதற்காக கொள்வனவு செய்யப்படும் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்த மதிப்பீட்டுப் பெறுமதியில் ஐந்து சதவீதத்திற்குக் குறையாத செயலாற்றல் பிணைமுறியொன்று பெறப்பட வேண்டும். எனினும் சபை செயலாற்றல் பிணையொன்றைப் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. அதன் காரணமாக ஒப்பந்தக்காரரினால் 2015 ஒக்தோபர் மாதத்தின் போது ஒப்பந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

(இ) ஒப்பந்தக்காரரினால் ரூபா 4,485,156 தொகைக்கான பட்டியல்களுக்காக பணத்தைப் பெற்றதன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. இருந்த போதிலும் சபையினால் ஒப்பந்தக்காரர் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படாமல் உரிய வேலையைப் பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்த வேலைகள் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஒரு ஒப்பந்தக்காரரினால் இடைநடுவில் இரண்டாவது கட்டத்தின் வேலைகள் கைவிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் ரூபா 304,491 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் ஒப்பந்தக்காரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(உ) மேற்கூறப்பட்ட பிரகாரம் ஒப்பந்தகாரரினால் இடையில் வேலைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மாகாண பொறியியலாளரினால் அவரின் 2014 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சகல ஒப்பந்த வேலைகளும் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

#### 4.3.2 மின் வேலி அமைத்தல்

2014 யூன் 20 ஆந் திகதி சபையினால் கழிவுப் பொருள் அகற்றும் நிலத்தை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த நிலத்தைச் சுற்றி மின்சார வேலியை அமைப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் ரூபா 893,060 பெறுமதியான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு சபையினால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்தக்காரரினால் பின்வரும் வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மாகாண பொறியியலாளரினால் வேலைகள் திருப்திகரமானதாக பூர்த்திசெய்யப்பட்டதாக உறுதிப்படுத்தி ரூபா 197,700 ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

| வேலை விடயம் | அலகுகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 90 அம்பியர் சோல அம்பியர் | 02 | 110,000 |
| மின்னல் தாங்கி உபகரணம் | 02 | 22,000 |
| கொழுக்கியுடன் தரைமின் மேவுகை | 03 | 5,700 |
| பரீட்சிப்பு மானி | 03 | 60,000 |
| மொத்தம் | | 197,700 |

(ஆ) மாதிரிகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் கி.வோ 7.5 இயளவையுடைய சூரிய சக்தி வழங்கல் பொருத்தப்பட வேண்டும். எனினும் ஒப்பந்தகாரரால் கி.வோ.1 இயலளவையுடைய சூரிய சக்தி வழங்கல் பொருத்தப்பட்டிருந்த போதிலும் மாதிரிகளில் குறிப்பிடப்பட்டதன் படி ரூபா 160,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சூரிய சக்தி வழங்கல் உரிய மாதிரியில் வைக்கப்படாது தற்காலிக கூடாரமொன்றில் ஒப்பந்தகாரால் கூரையில் வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) மாதிரிகள் மற்றும் திட்டமிடல்களின் பிரகாரம் வேலியை நிர்மாணிப்பதற்காக அமைக்கப்பட்ட இரண்டு மரத்தூண்களுக்கிடையே இடைவெளி 4 மீற்றராக இருக்க வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தகாரரினால் 33 மீற்றர் தூரத்திலான இடைவெளியில் மரத்தூண் நட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக மூன்று வரிசை வயர்களும் (Three Phase Wire) ஒன்றுக்கொன்று பிணைந்து காணப்பட்டது.

(ஈ) மின்சார வேலிக்கு அவை நட்டப்பட்ட நாள் தொடக்கம் மின்சார இணைப்பு வழங்கப்படாமையின் காரணமாக ஒப்பந்தகாரரினால் தயாரிக்கப்பட்ட மரத்தூண்களில் அனேகமானவை காட்டு யானைகளினால் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மின்வேலி அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தூண், வயர், போன்ற சகல விடயங்களும் திருடர்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இதனால் இச் செயற்பாட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 618,858 கூட்டுத்தொகையான செலவினம் பயனற்றதாக இருந்தது.

### 4.3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

திருகோணமலை நகரசபை, பிரதேசசபை, நகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களின் அளவு வருடமொன்றிற்கு அண்ணளவாக 19,350 மெட்ரிக் தொன் நிறையாக இருந்ததுடன் அவற்றை கன்னியாவில் அமைந்துள்ள கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலத்தில் குவிக்கப்பட்டிருந்தது. அதனால் காட்டுப்பகுதியில் போடப்பட்டுள்ள கழிவுப்பொருளின் காரணமாக சுற்றாடல் பாதிப்பிற்குள்ளாகியதுடன் காட்டு யானைகளின் பாதிப்பிற்கும் உட்பட்டிருந்தது.

### 4.4 பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் சிபாரிசகளை அமுல்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வுச் சபையினால் 199 பொருள் விடயங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும், 80 பொருள் விடயங்களை அகற்றுவதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது 272 களஞ்சிய விடயங்கள் மற்றும் 218 நூலகப் புத்தகங்கள் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் முகாமைத்துவத்தால் இந்த பற்றாக்குறை தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் இதுவரையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாதத்தின் இறுதியின் போதும் ரூபா 41 மில்லியன் முதல் ரூபா 55 மில்லியனிற்கு இடையேயான வீச்சில் வங்கி நடைமுறைக் கணக்கு மீதியொன்று காணப்பட்ட போதும் அவற்றை வட்டி உழைக்கும் முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிட எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 03 | 01 | 02 | - |
| இரண்டாம் தரம் | 94 | 69 | 25 | - |
| சிற்றூழியர் | 186 | 154 | 32 | - |
| ஏனையவை (அமைய/தற்காலிகம்) | - | 110 | - | 110 |
| மொத்தம் | 283 | 334 | 59 | 110 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் கணக்காளர் பதவி 09 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டும் அப்பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், பொது சகாதார பரிசோதகர், மொழிபெயர்ப்பாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகப் பொறுப்பாளர், வருமானப் பரிசோதகர், சந்தை மேற்பார்வையாளர், மோட்டார் தொழில்நுட்பவியலாளர் மற்றும் தீயணைப்பாளர் போன்ற பதவிகளின் வெற்றிடங்கள் 2015 ஒக்தோபர் 10 கணக்காய்வுத் திகதி வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 16 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) மனிதவள முகாமைத்துவம்
(எ) ஒப்பந்த நிர்வாகம்